16. கண்ணன் வராததால், மனம் கலங்கின ராதை, கண்ணனுடைய ஸ்வரூபத்தையே நினைந்து, அவரை வர்ணித்து உலகனைத்தும் மயங்கச் செய்யும் அம்மாயக் குழலை ஊதி தன் ஊழ்வினையை அகற்றிட வேண்டுகிறாள்.

இரகாம் : சாவேரி　　　　　　　　　　தாளம் : மிச்ரசாபு

ஆ : ஸ ரி ம ப த ஸ　　　　　　　　15-வது மேளகர்த்தாவின்

அ : ஸ் நி த ப ம க ரி ஸ　　　　　　ஜன்யம்

**பல்லவி**

கமலத் திருமுகத்தில் கஸ்தூரி திலகமும்
கருணை பொழியும் கண்கள் ஒளி வீசுதே கண்ணா　　(கமல)

## அனுபல்லவி

சமரில் அசுரர்களை வென்ற திருமார்பா
சதி செய்யும் வஞ்சகரை சம்ஹரித்த - கண்ணா (கமல)

## சரணம்

காதில் குண்டலம் ஆட காற்றில் குழை ஆட
கையில் குழல் கனிந்த செவ்வாயில் வைத்து
ஊதி உலகனைத்தும் மயங்கச் செய்த உத்தமனே என்
ஊழ்வினை தீர்ந்தருள் தீன சரண்யனே (கமல)

## பல்லவி

| | | | |
|---|---|---|---|
| , க்ரி ஸ்ா ; | தரிஸ் ஸ்நிதா பத | , ஸரி மபதஸ்நிததா | மபாதபம கரிரீ |
| கம லத் | திரு முக. த்தில் | கஸ் தூ .... ரி | தி. ல. க. மும் |
| , கரி ஸா, ப த | ஸ ஸா ரீ ரீ | , ரி பம தப தா | ஸ்ா; ப த ஸ் |
| கரு ணை பொ. | ழியும் கண்கள் | ஒ ளி. வீ. சு | தே க ண் ணா |
| ரி - | | | |
| . (கமல) | | | |

## அனுபல்லவி

| | | | |
|---|---|---|---|
| , பம தா, பத | ஸ்ரீ க்ரி ஸ்ரி | ; ம்க் ரீ ஸ்ா | ஸ் ரீ கஸ் ரீ |
| சம ரில் அ . | சுர ர் க. ளை | வென் . ற | திரு. மார் பா |
| , ஸ்ரி ஸ்ா ஸ்ா | தரிஸ் ஸ்நிதா பத | , பத பா பம | பா த ஸ்ா ; |
| சதி செய் யும் | வஞ் சக.. ரை. | சம் ஹரித் த. | க ண் ணா |
| , | | | |
| (கமல) | | | |

## சரணம்

| | | | |
|---|---|---|---|
| , கரிஸரி மா, ரிம | ப பா பமதப தா | ,கரிஸரிமபதஸ்நிதபத | மபாதபம கரி ரீ |
| கா...தில் குண் | டலம் ஆ... ட | கா..ற் றில் . . . . | கு.ழை..யா. ட |
| , க ரி ஸா ; | பத ஸா ஸ்நிதா தா | , ஸரி மா, ரிம | பா பம மாதப தா |
| கை. யில் | கு.ழல் எடுத்து | கனி ந்த செவ் | வா யில் வை. த்து |
| , தா ஸ்ா ; | த ஸ் ஸ் ரீ ரீ | , த ஸ் ரி க் க்ா | ஸ்ா ரி ம் ம்ா ம் |
| ஊ தி | உ ல க னைத்தும் | மயங்கச் செய் த | உத்த ம னே என் |

| | | | |
|---|---|---|---|
| கா , ரீ ரீ | ஸ்ா, நி த தா | , ஸரி மா பா | பா, தபம தப தா |
| ஊ ழ்வி னை | தீ ர் த் த. ருள் | தீ . ன ச | ர ண். . ய. னே |
| , - | | | |
| (கமல) | | | |